# ஏப்ரல் 13-இல் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு ஓட்டம்

**சென்னை,மார்ச் 1:** மியாட் மருத்துவமனை மற்றும் பாரத ஸ்டேட் வங்கி ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு ஓட்டம் (பிங்கத்தான்) சென்னையில் வரும் ஏப்ரல் 13-ஆம் தேதி நடைபெறுகிறது.

இது குறித்து மியாட் மருத்துவமனையின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ், தேவிகா போஜ்வானி உள்ளிட்டோர் செய்தியாளர்களிடம் கூறியது:

இந்தியப் பெண்களில் 22 பேரில் ஒருவருக்கு தங்களது வாழ்நாளில் மார்பக புற்றுநோய் தாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் புதிய மார்பக புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை 1 லட்சத்து 15 ஆயிரமாகும்.

இது 2015-ஆம் ஆண்டில் 2 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அனைத்து விதமான புற்றுநோய்களுக்கும் ஆரம்ப நிலையில் சிகிச்சை அளித்தால் குணப்படுத்த முடியும்.



இந்தியப் பெண்கள் தங்களது உடல்நிலையைப் பற்றி கவலைப்படுவது இல்லை.

அதனால், இந்தியப் பெண்களின் உடல்நலம் மற்றும் தகுதியை மேம்படுத்தவும், அவர்களுக்கு மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு அளிக்கவும் மியாட் மருத்துவமனை சார்பில் ஆண்டுதோறும் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு ஓட்டம் நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டு சென்னையில் முதல், விழிப்புணர்வு ஓட்டம் ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி நடைபெற உள்ளது.

தற்போது நடைபெறவுள்ள போட்டியில் சுமார் 2 ஆயிரம் பெண்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம். இப்போட்டியில் பங்கு பெற விரும்புபவர்கள் www.pinkathon.in என்ற இணையதளத்தில் தங்களின் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என அவர்கள் தெரிவித்தனர்.